ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2194/48 - 2020 සැප්තැම්බර් මස 23 වැනි බදාදා - 2020.09.23
*2194/48 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*39 (1) ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்தல்*

பிரதேச செயலாளர் இல. : க/ப்ராலே/ஒ/2/2-87.

*1997 மாச்சு மாதம் 04 ஆந் திகதிய 965/5 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 299 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளன. அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப் பட்டுள்ளன. எனினும், பின்வரும் அட்டவணையில் விபரிக்கப் பட்டுள்ள காணிகளின் இருப்பாட்சி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு சார்பில் இன்னும் பொறுப்பேற்கப்பட வில்லை. எனவே, அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், குறித்த 1997 மாச்சு மாதம் 04 ஆந் திகதிய 965/ 5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேற்குறித்த 1997 பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதிய 1997 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க கட்டளையை இக் கட்டளை மூலம் இரத்துச் செய்கின்றேன்.*

எஸ்.எம். சந்திரசேன,
காணி அமைச்சர்.

எனது இல. : 13/96/AS/1/283
காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர", காணிச் செயலகம்,
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, செத்தெம்பர் 12.

**அட்டவணை 1**

தென் மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டம், கட்டுவன பிரதேச செயலாளர் பிரிவில், உதுரு கிருவா பற்று சிறு பிரிவில், கொன்கஸ்தென்ன கிராமத்தில் அமைந்துள்ள, அம்பாந்தோட்டை பிரிவிற்கு பொறுப்பான நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 1996.12.14 ஆந் திகதிய H/KTW/96/290 ஆம் இலக்க முதற் சுவட்டு வரைபடத்தில் விபரமாகக் காட்டப்பட்ட சுமார் 0.106 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய ககந்தயாஹேன எனும் காணித்துண்டு :

*01* **துண்டு 'A' - கஹந்தயாஹேன - விஸ்தீரணம் : சுமார் 0.106 ஹெக்டயார்**

வடக்கு : $5^{P}$ மற்றும் 12 ; கிழக்கு: 12 ; தெற்கு: வீதி ; மேற்கு: $5^{R}$ மற்றும் $5^{P}$.

*10 - 312*

1A – G32974 – 20(2020/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.